# கூட்டுறவு நூற்பாலையில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

## அமைச்சர் தகவல்



ஆண்டிபட்டி அருகே க.விலக்கு அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் ஆய்வு செய்த கைத்தறி, துணிநூல், கதர் துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி. உடன் தேனி மாவட்ட ஆட்சியர் இரா.வைத்திநாதன், கம்பம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா உள்ளிட்டோர்.

**தேனி, ஜூன் 24:** அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் உற்பத்தியை அதிகரித்து, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில கைத்தறி, கதர் துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி தெரிவித்தார்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே க.விலக்கில் உள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் புதன்கிழமை ஆய்வு செய்த அமைச்சர், பஞ்சு, கலவை நூல்கள் தயாரிப்பு குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து, ஆலை ஊழியர்களிடம் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு உற்பத்தி குறைந்துள்ளது. எனவே, உற்பத்தியை அதிகரித்து இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும், தரம் உயர்த்துவது குறித்தும் அதிகாரிகளுடன் ஆலோசித்து வருகிறோம்.

நூற்பாலையில் பணிபுரியும் ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்ய கோரிக்கை விடுத்தனர். இது குறித்து ஆலோசனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். நெசவுத் தொழில் நாளுக்கு நாள் நலிவடைந்து வருகிறது. நெசவாளர்களுக்கு ஊக்கம் அளித்து துறையை மேம்படுத்த வேண்டும் என்பது அரசின் நோக்கம். இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் நிறுவனங்களுக்கு நிகராக அரசு நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இதை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

இந்த ஆய்வின் போது, தேனி மாவட்ட ஆட்சியர் இரா.வைத்திநாதன், கம்பம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ரஜத் பீடன், கைத்தறி இணை இயக்குநர் கிரிதரன், பெரியகுளம் வருவாய்க் கோட்டாட்சியர் கவிதா, மதுரை மண்டல துணிநூல் துணை இயக்குநர் திருவாசகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வண்டல் மண் எடுக்க விவசாயிகளுக்கு அனுமதி

**திண்டுக்கல், ஜூன் 24:** திண்டுக்கல் மாவட்டத்தில் பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டிலுள்ள 71 நீர்நிலைகளிலிருந்து வண்டல்மண் எடுக்க விவசாயிகள், மண்பாண்டத் தொழிலாளர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திண்டுக்கல் மாவட்டத்தில் பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டிலுள்ள 71 நீர்நிலைகளிலிருந்து வண்டல் மண்ணை விவசாயம், மண்பாண்ட தொழில்களுக்கு இலவசமாக எடுத்துச் செல்வதற்கான அனுமதி திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது.

இந்த நீர்நிலைகளிலிருந்து இலவசமாக மண் எடுத்துச் செல்ல விவசாயிகள் விண்ணப்பிக்கலாம். மண் எடுக்க சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களே இணையவழியில் அனுமதி வழங்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

வண்டல் மண் எடுப்பதற்கு இணைய வழியில் விண்ணப்பித்து, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அனுமதியுடன் தங்களது சொந்த செலவில் மண், வண்டல் மண், களிமண் வெட்டி எடுத்து வேளாண்மை, மண்பாண்டத் தொழிலை மேம்படுத்திக் கொள்ளலாம்.

விண்ணப்பிக்கும் விவசாயிகள் தங்களது நில ஆவணங்களை இணையத்தில் பதிவு செய்ய வேண்டும். வருவாய்த் துறையால் பராமரிக்கப்படும் இணைய தரவுகளின் கீழ் நிலஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு அரசின் நிபந்தனைகளுக்குள்பட்டு அனுமதி வழங்கப்படும்.

விவசாயப் பயன்பாட்டுக்கான நஞ்சை நிலத்துக்கு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டர் அல்லது ஒரு ஹெக்டருக்கு 185 கன மீட்டர் அளவிலும், புஞ்சை நிலத்துக்கு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டர் அல்லது ஒரு ஹெக்டருக்கு 222 கன மீட்டர் அளவிலும், மண்பாண்டம் தயாரித்திட 60 கன மீட்டர் அளவிலும், சொந்த வீட்டு உபயோகத்துக்கு 30 கன மீட்டர் அளவிலும் கட்டணமின்றி வண்டல் மண் எடுக்க அனுமதிக்கப்படும்.

விவசாயிகள், மண்பாண்டத் தொழிலாளர்கள் tnesevai.tn.gov.in என்ற இணைய தளம் மூலமாக விண்ணப்பித்து பயன்பெறலாம் என்றார் அவர்.

# பழனியில் தமிழ்ப்புலிகள் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

**பழனி, ஜூன் 24:** குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களை கண்டித்து, பழனியில் தமிழ்ப்புலிகள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

பழனி ரயிலடி சாலையில் பெரியார் சிலை முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டச் செயலர் இரணியன் தலைமை வகித்தார். இந்திய குடியரசு கட்சி மாவட்டத் தலைவர் ஆறுமுகம், ஆதித்தமிழர் கட்சி வினோத், அருந்ததியர் நலச்சங்க தலைவர் நாகராஜ் உள்ளிட்டோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, தமிழகத்தில் பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களை கண்டித்தும், ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றக் கோரியும், வேலாயுதம்பாளையம் புதூரில் அருந்ததியர் மக்களை தாக்கிய நபர்களை கைது செய்யக் கோரியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரியும் முழக்கமிட்டனர்.



பழனி ரயிலடி சாலை பெரியார் சிலை முன் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்ப்புலிகள் கட்சியினர்.

# பழனி பெருமாள் கோயிலில் சக்கரத்தாழ்வார் ஜெயந்தி விழா

**பழனி, ஜூன் 24:** திண்டுக்கல் மாவட்டம், பழனி பெருமாள் கோயிலில் சக்கரத்தாழ்வார் ஜெயந்தி விழா புதன்கிழமை நடைபெற்றது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் துணைக் கோயிலானது லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில். இந்தக் கோயிலில் சித்திரைத் திருவிழா, நவராத்திரி, பரமபதவாசல் திறப்பு உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் நடைபெறும்.

இந்தக் கோயிலில் சக்கரத்தாழ்வாருக்கு என தனி சந்நிதி உள்ளது. இங்கு புதன்கிழமை சக்கரத்தாழ்வார் ஜெயந்தி விழா நடைபெற்றது.

இதையொட்டி, சக்கரத்தாழ்வாருக்கு பால், பன்னீர், பஞ்சாமிர்தம், விபூதி உள்ளிட்ட நறுமணப்பொருள்களால் அபிஷேகமும், இதைத் தொடர்ந்து, வெள்ளிக்கவச அலங்காரமும் நடைபெற்றது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பிரசாதங்கள், பொங்கல் வழங்கப்பட்டது.

இதில் ஒப்பந்ததாரர் நேரு, அரிமா சுந்தரம், தமிழக வெள்ளாளர் பேரவை சிவசுப்பிரமணி, முன்னாள் கண்காணிப்பாளர் முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை கந்தவிலாஸ் செல்வக்குமார், கந்தவிலாஸ் நவீன் விஷ்ணு, நரேஷ்குமரன் ஆகியோர் செய்தனர்.


**WANTED**

**MALE GRADUATE WITH MCA/B.E/B.TECH**
For a Programmer in ICT centre

- **Required Technical Skills:** ISP, MySQL, and PhP
- **Work experience:** 3 years and above

**PROFESSOR OF PRACTICE**

- **Work Experience:** Professionals with extensive industry experience and exposure
- **Background:** Diversified industries like Manufacturing, IT, Automobile, Engineering, Management and others.
- **Role:** Industry-academia training, Internships and Placement Enhancement to Students.

Male & Female Graduates can Apply

Eligible candidates can send Biodata or CV before 07.07.2026

THE SECRETARY
St. JOSEPH'S COLLEGE (Autonomous)
TIRUCHIRAPPALLI – 620 002


# கொடைக்கானலில் மழை

**கொடைக்கானல், ஜூன் 24:** திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் பகுதியில் புதன்கிழமை மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கொடைக்கானலில் காலை முதலே மேகமூட்டம் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து விட்டு விட்டு மிதமான மழை பெய்தது. கொடைக்கானல் மேல்மலைக் கிராமமான மன்னவனூர், கவுஞ்சி, கும்பூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் பிற்பகலில் சுமார் 30 நிமிஷம் பலத்த மழை பெய்தது. இந்த மழையால் பொதுமக்கள்,விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**மின் கம்பி சேதம்:** மன்னவனூர் பகுதியில் காற்றுடன் பலத்த மழை பெய்ததால், வனப் பகுதியிலுள்ள மின் கம்பத்தில் மரக்கிளை முறிந்து விழுந்தன. இதனால், மின்கம்பி சேதமடைந்து சுமார் ஒரு மணி நேரம் மின் தடை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, சேதமடைந்த மின்கம்பியை மின் பணியாளர்கள் சீரமைத்தனர். பின்னர், மின் விநியோகம் சீரானது.


**THIRUVALLUVAR COLLEGE**
PAPANASAM – VICKRAMASINGAPURAM-627 425,
TIRUNELVELI DISTRICT. Phone: 04634-220327,290631

Re-accredited with 'B' Grade by NAAC

**CO-EDUCATION**

Applications are invited from the eligible candidates to fill up the following permanent post of Assistant Professor (Chemistry) in our College, approved by the Commissioner of Collegiate Education, Chennai-6 vide letter No.TNDCE/276/2026-G3 Dated 18.03.2026

| S.NO. | SUBJECT | ROSTER | NO.OF VACANCIES |
|---|---|---|---|
| 1. | CHEMISTRY | SCHEDULED CASTE - ARUNTHATHIYARS ON PREFERENTIAL BASIS - TAMIL MEDIUM. | 01 |

Educational Qualification: As per UGC Norms and Tamil Nadu Government rules. Post Graduate in Chemistry Subject with 55% of Marks(For SC/ST/Differently abled Candidates 50% of marks in PG) and Pass in SLET/NET(Or) Ph.D. Eligible Candidates should apply to the Secretary, along with their Bio-data mentioning their live Registration Number with the Employment Exchange, Copies of all mark Statements, Diploma/Provisional Certificate commencing from X Std., and Community Certificate.

Application should reach the college office addressed to the Secretary on or before 10-07-2026 through Registered/Speedpost.

DATE: 25.06.2026

Thavathiru Kundrakkudi **PONNAMBALA ADIGALAR**
Secretary



BEFORE THE NATIONAL COMPANY LAW TRIBUNAL
HYDERABAD BENCH

IA (CA) No. 34 of 2026 IN

CP. No. 31/241/HDB/2025 AND

IN THE MATTER OF SECTION 241 & 242 READ WITH 244 OF THE COMPANIES ACT, 2013 AND

ALL OTHER APPLICABLE PROVISIONS OF THE SAID ACT AND

IN THE MATTER OF CHHAPRA-HAJIPUR EXPRESSWAYS LIMITED

Between : Dhanalakshmi Srinivasan Builders & Housing Private Limited .... Petitioner /Applicant

Versus

Chhapra-Hajipur Expressways Limited & Ors. ..... Respondents /Respondents

**NOTICE OF HEARING**

An IA (CA) No. 34 of 2026 in CP No. 31/241/HDB/2025 under rule 11 of the National Company Law Tribunal, 2016 was presented by Dhanalakshmi Srinivasan Builders & Housing Private Limited before the Hon'ble National Company Law Tribunal, Hyderabad Bench, at the hearing on 09.04.2026 it was noticed by the Hon'ble Tribunal that the Respondent No. 9 i.e. Mr. Dhayalan, Son of Late Engovalan have not entered appearance and thereupon the Hon'ble Tribunal, Hyderabad Bench ordered the publication of Notice of hearing. Hence accordingly notice is hereby given that the IA (CA) No. 34 of 2026 in CP No. 31/241/HDB/2025 is posted for hearing on 09.07.2026 before the Hon'ble National Company Law Tribunal, Hyderabad Bench.

Date: 23.06.2026
Place: Hyderabad

Sd/-
**Y. Suryanarayana**
Advocate for the Petitioner/ Applicant
Flat No. 106, Nirmal Tower 200,
Dwarakapuri Colony, Punjagutta,
Hyderabad - 500082



यूनियन बैंक ऑफ इंडिया — Union Bank of India — A Government of India Undertaking

**யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா**
உத்தமபுரம் கிளை
எண். 33, LF சாலை, கம்பம், தேனி மாவட்டம் - 625 516. அலைபேசி : 91376 42960.
மின்னஞ்சல்: ubin0542962@unionbankofindia.bank.in

**அசையாச் சொத்துக்களுக்கான இ-ஏல அறிவிப்பு** — இணைப்பு-IX

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழ்க்காணும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து **யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கிக்கு** வர வேண்டியுள்ள பின்வரும் நிலுவைத்தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் **யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியின்** (ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்) அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளவையுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி விற்பனை செய்யப்பட உள்ளன. இதன் குறைந்தபட்ச விலை மற்றும் முன்வைப்புத்தொகை ஆகியவையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**கடன்தாரர், கூட்டு விண்ணப்பதாரர் மற்றும் ஜாமீன்தாரர் பெயர்: 1) M/s.சூரியா டெக்ஸ்டைல்ஸ் (பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி.K. சூர்யா பிரபா, க/பெ. திரு.குமார்,** கதவு எண்.29/1, வரதராஜபுரம் கிழக்குத் தெரு, கம்பம், உத்தமபாளையம் வட்டம், தேனி - 625516. **2) திருமதி.K. சூர்யா பிரபா, க/பெ. திரு.குமார்** கதவு எண்.77-1/19, வடக்கு ரத வீதி, மேலகூடலூர், உத்தமபாளையம் வட்டம், தேனி - 625518. **3) திருமதி. M.செல்வி, க/பெ.திரு.மணி (ஜாமீன்தாரர் /அடமானதாரர்)** கதவு எண்.6/20W, கருவன் சொக்கர் தேவர் தெரு, மேலகூடலூர் கிராமம், கூடலூர் நகராட்சி, உத்தமபாளையம் வட்டம், தேனி - 625518. **4) திரு. குமார், த/பெ. ராசு (ஜாமீன்தாரர் /அடமானதாரர்)** கதவு எண்.77-1/19, வடக்கு ரத வீதி, மேலகூடலூர், உத்தமபாளையம் வட்டம், தேனி - 625518.

**நிலுவைத்தொகை: 31-05-2026 அன்றுள்ளபடி ரூ.18,20,941.62 (ரூபாய் பதினெட்டு லட்சத்து இருபதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தொரு மற்றும் பைசா அறுபத்திரண்டு மட்டும்)** மற்றும் ஒப்பந்த விதத்தில் **மேற்கொண்டு வரும் வட்டி & செலவுகள் ஆகியன.**

**விற்கப்படவுள்ள கடனீட்டு அசையாச் சொத்து விபரம் :** அனைத்து உரிமைகளும் உடமைகளும் கூடிய நிலம் மற்றும் கட்டடச் சொத்து அமைவிடம் : தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், கம்பம் சார் பதிவு மாவட்டம், கூடலூர் நகராட்சி நகரம், மேலகூடலூர் கிராமம், பழைய வார்டு எண். 11, புதிய வார்டு எண். 20, கருவன் சொக்கர் தேவர் சந்து, . தீர்வை எண். 123/020/00029 இன் படி, வார்டு எண்.20, கதவு எண்.6 இல் உள்ள வீட்டுச் சொத்து, நத்தம் சர்வே எண். 1467/10B இல் உள்ளது. **எல்லைகள்:** கிழக்கு: தெற்கு -வடக்குத் தெரு, தெற்கு :பெரியகருப்ப தேவர் வீட்டு மனை & பொதுச் சுவர், மேற்கு: M.பேப தேவர் வீட்டு மனை & பொதுச் சுவர், வடக்கு: சாமி தேவர் வீட்டு மனை & பிற பொதுச் சுவர். இந்த எல்லைகளுக்குள் குடியிருப்பு வீடு அளவீடுகள்: கிழமேல் தென்புறம் 33 3/4 அடி மற்றும் வடபுறம் 31 1/4 அடி, தென்வடல் மேல்புறம் 29 1/2 அடி மற்றும் கிழபுறம் 27 அடி, **918 1/4** சதுர அடிக்கு சமம் மற்றும் மின்சார சேவை இணைப்பு S.C எண்.A-198 மற்றும் தண்ணீர் குழாய் இணைப்பு எண். 3007 ஆகியவை பொருத்தப்பட்டதும் மற்றும் அதன் வழக்கமான பாதை உரிமைகள், சுவர் உரிமைகள் மற்றும் தண்ணீர் எடுக்கும் உரிமைகள் போன்றவற்றுடன் கூடியதுமான கட்டடம் சகிதம். **இச்சொத்து திருமதி.M.செல்வி, க/பெ. திரு. மணி என்பவருக்குச் சொந்தமானது. சுவாதீன வகை: அடையாள சுவாதீனம்.**

**குறைந்தபட்ச விலை : ரூ.27,50,000.00 முன்வைப்புத்தொகை (EMD) : குறைந்தபட்ச விலையில் 10% ஏலம் உயர்த்தும் தொகை: ரூ. 30,000.00**

**கடன் வழங்கிய வங்கிக்கு தெரிந்த ஏதேனும் வில்லங்க விவரங்கள்: NIL, ஏலதாரர்கள் தங்கள் சொந்தமாக விசாரணையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**கணக்கு எண் :** 429601980050000, **கணக்கு பெயர் - INWARD RTGS, உத்தமபுரம் கிளை IFSC Code :** UBIN0542962. **திரு.அனீஷ் M, கிளைத் தலைவர், உத்தமபுரம் கிளை, மொபைல் எண் : 9137642960**

முன்வைப்புத்தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் :
E-ஏலம் தொடங்கும் நாளன்று அல்லது அதற்கு முன் செலுத்த வேண்டும்.

ஏல நாளும் நேரமும்: 14.07.2026 (செவ்வாய்க்கிழமை) (பகல் 12:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை)
(எண்ணிக்கை வரம்பின்றி 10 நிமிடம் தானாகக் காலநீட்டிப்பாகும் வகையில்)

**குறிப்பு: குறைந்தபட்ச விலையில் 10% முன்வைப்புத்தொகை (EMD)** https://baanknet.com **இணையத்தளத்தின் மூலம் செலுத்தப்பட வேண்டும். விற்பனை விலையின் மிச்சத் தொகை விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு எண்ணில் செலுத்தப்பட வேண்டும்.**

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறியக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வங்கி இணையத்தளங்கள் மற்றும் e-ஏல இணையத்தள இணைப்புகளைப் பாருங்கள்.

சொத்து விவரங்கள் (அதாவது e-ஏல விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரப்பளவு மற்றும் பரிமாண விவரங்கள்) அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையில் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் ஏதாவது பிழையோ முரண்பாடோ விடுபாடோ நேரடி சுவாதீனம் தொடர்பான பரப்பளவிலும் பரிமாணத்திலும் ஏதாவது வேறுபாடோ காணப்பட்டால் அதிகாரப்பூர்வ அலுவலர் அதற்கு விளக்கமளிக்கக் கடமைப்பட்டவர் இல்லை.

website: https://baanknet.com and https://www.unionbankofindia.co.in/auction-property/view-auction-property.aspx

இடம் : உத்தமபுரம்
நாள் : 22.06.2026

அதிகாரப்பூர்வ அலுவலர்
யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா



**பஞ்சாப் நேஷனல் வங்கி**
**punjab national bank**

வட்ட அலுவலகம், கந்தா என்கிளேவ், எண்.179, சரோஜினி வீதி, ராம் நகர், கோயம்புத்தூர் – 641 009.
போன் : 0422-2238839. இ-மெயில் : cocoimrec@pnb.bank.in

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 17.07.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)**

**முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 17.07.2026, மாலை 3.00 மணி வரை**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) ன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

**பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை**

| லாட் எண். | கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம் | பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் /உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்) | அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி<br>ஆ) நிலுவைத் தொகை<br>இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி<br>ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் /கொள்நிலை/ ஆக்கபூர்வ சுவாதீனம் | 1) ரிசர்வ் விலை<br>2)முன்வைப்புத் தொகை (EMD)<br>3) ஏல மடங்குத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | **கிளை அலுவலகம் : திண்டுக்கல் (298100)**<br><br>**கடன்தாரர்/அடமானதாரர் : திரு. முருகேசன் K** த/பெ. காளிமுத்து (லேட்) கதவு எண்.298, சர்வே எண்.143/3, TNHB ரோடு, பூதம்பட்டி, ஸ்ரீராமபுரம் கிராமம், வேடசந்தூர் தாலூகா திண்டுக்கல் மாவட்டம் – 624 710.<br><br>**உத்தரவாதமளித்தவர் : திரு. சரவணன் M** த/பெ. முருகேசன் சர்வே எண்.143/3, TNHB ரோடு, பூதம்பட்டி, ஸ்ரீராமபுரம் கிராமம், வேடசந்தூர் தாலூகா திண்டுக்கல் மாவட்டம் – 624 710. | **(அட்டவணைச் சொத்து) :**<br>**திரு.K.முருகேசனுக்குச் சொந்தமான சொத்து (PAN BQDPM8995C) :** திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், வேடசந்தூர் சார் பதிவு மாவட்டம், வேடசந்தூர் தாலூகா, ஸ்ரீராமபுரம் கிராமத்தில் சர்வே எண்.143/3ல் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடம் சேர்ந்த சொத்து. **அளவுகளாக :** கிழமேல் 47 அடி வடபுறம் மற்றும் கிழமேல் 36 அடி தென்புறம், தென்வடல் 30 அடி கிழபுறம் மற்றும் தென்வடல் 30 அடி மேற்புறம் ஆக உள்ள மொத்தம் 1245 சதுர அடி நிலத்துடன் அதிலுள்ள கட்டிடமும் சேர்ந்த சொத்தின் **எல்லைகள் :** மேற்கு : ஓமபோயனுக்குச் சொந்தமான காலி மனை, தெற்கு : S.மகேந்திரனுக்குச் சொந்தமான காலி மனை, கிழக்கு : V.கிருஷ்ணமூர்த்திக்குச் சொந்தமான நிலம், வடக்கு : நாகப்பன் மற்றும் பழனிசாமிக்குச் சொந்தமான வீடு.<br>**அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் :** 10.517970 78.008640 | அ) 10.10.2019<br><br>**ஆ) ரூ.2,50,205/– 30.05.2026** தேதி வரை மற்றும் **31.05.2026** தேதியிலிருந்து பின் வட்டி, கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளுடன். **(கணக்கு எண். 298100NC00042032) ரூ.20,25,336.60, 31.05.2026** தேதி வரை மற்றும் **01.06.2026** தேதியிலிருந்து பின் வட்டி, கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளுடன். **(கணக்கு எண். 2981009900000244) மொத்தம் : ரூ. 22,75,541.60 (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து ஐநூற்று நாற்பத்து ஒன்று மற்றும் பைசா அறுபது மட்டும்)**<br><br>இ) 09.03.2026<br><br>ஈ) அடையாளம் | **1) ரூ.16,50,000/–** (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)<br><br>**2) ரூ.1,65,000/–** (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்)<br><br>**3) ரூ.25,000/–** (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)<br><br>**மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 17.07.2026 (வெள்ளிக் கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** |

**மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்**

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **17.07.2026 (வெள்ளிக்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.

**https://baanknet.com & www.pnbindia.in**

தேதி : 23.06.2026
இடம் : கோயமுத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

**பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) ன் கீழான, சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு**